செ.வெ.எண்: 48 நாள்: 17.02.2017

# பத்திரிகைசெய்தி

புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைநாடும் இளைஞாகள் படித்து பயன்பெறும் வண்ணம் தன்னார்வ பயிலும் வட்டம் என்ற பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையத்தின் மூலமாக பல்வேறு வகையான போட்டித்தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்திடத் தேவையான பல்வேறு புத்தகங்கள், மாதாந்திர சஞ்சிகைகள் மற்றும் பத்திரிக்கைகள் அடங்கிய நூலகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் 2017ம் ஆண்டில் நடைபெறவுள்ள மத்திய அரசின் கீழ் இயங்கும் "STAFF SELECTION COMMISSION " மூலம் நிரப்பப்படும் Multi tasking staff மற்றும் தமிழ்நாடு அரசு சீருடைப்பணியாளர் குழுமம் மூலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ள இரண்டாம் நிலைக் காவலர் போன்ற பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கான விளம்பரங்கள் வெளிவந்துள்ளன. இத்தேர்வுகளுக்கு விண்ணப்பித்துள்ள நபர்கள் அனைவரும் சிறந்த முறையில் தேர்வு எழுதி வெற்றி பெறுவதற்குத் தேவையான இலவச முன்பயிற்சி வகுப்புகள் இவ்வலுவலக தன்னார்வ பயிலும் வட்டத்தின் வாயிலாக நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளன. பயிற்சிவகுப்புகள் 22.02.2017 முதல் அலுவலக வேலைநாட்களில் தினமும் காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை உரிய திட்டநிரல் மற்றும் கால அட்டவணைப்படி நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பயிற்சி வகுப்புகளில் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவுகளில் அனுபவமிக்கவர்களும், இதுபோன்ற போட்டித் தேர்வுகளுக்கு ஏற்கனவே பயிற்சி அளித்துள்ள வல்லுநர்களும் பயிற்சி அளிக்க உள்ளனர். மேலும் பயிற்சி வகுப்புகளின்போது பாடக்குறிப்புகள் வழங்கப்பட்டு மாதிரித் தேர்வுகளும் அவ்வப்போது நடத்தப்படும்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் 22.2.2017 அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி தாங்கள் இப்போட்டித்தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள ஆதாரத்துடன் தங்களது விருப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**